புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 94 | 09-10-2026 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 02 | Issue: 94 | 09-10-2026 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


## நேரடி பரிமாற்ற திட்டத்தில் பயனாளிகளுக்கு இதுவரை ரூ.50 லட்சம் கோடி வழங்கல்" பிரதமர் மோடி பெருமிதம்



புதுடெல்லி: அக்.9–

அரசு சேவைகளை வழங்குவதில் மொபைல் போன்கள் முக்கிய பங்கை வகிப்பதாக தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, நேரடிப் பயன் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு ரூ.50 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்திய மொபைல் காங்கிரஸ் அமைப்பின் 10ம் ஆண்டு மாநாடு புதுடெல்லியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "மொபைல் போன் என்பது வெறும் தகவல் தொடர்பு சாதனமாக மட்டுமல்லாமல், நிர்வாகம் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான ஒரு முக்கிய கருவியாக மாறியுள்ளது.

நூற்றுக்கணக்கான அரசு சேவைகள் இப்போது மொபைல் போன்களிலேயே கிடைக்கின்றன. மொபைல் எண்களுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு அரசு நேரடியாக பணத்தை அனுப்புகிறது.

நேரடிப் பயன் பரிமாற்றத் திட்டம் மூலம் ரூ.50 லட்சம் கோடி பயனாளிகளின் மொபைல் எண்களுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதன் காரணமாக சுமார் ரூ.5 லட்சம் கோடி தவறான கைகளுக்குச் செல்வது தடுக்கப் பட்டது.

விவசாயிகளுக்கு நேரடி நிதி உதவியை வழங்கும் பிரதமரின் கிசான் சம்மன் நிதி திட்டத்தின் மூலம் ரூ.4 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்பட் டுள்ளன. இத்தொகை ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அளிக்கப் படுகிறது.

பணம் வரவு வைக்கப்பட்டவுடன் விவசாயிகள் தங்கள் மொபைல் போன்களில் அதற்கான அறிவிப்பைப் பெறுகிறார்கள். குறைவான பயணம், குறைவான காத்திருப்பு நேரம், குறைவான செலவு, அதிக வசதி ஆகியவற்றை மொபைல் போன்கள் உறுதி செய்துள்ளன.

2022ம் ஆண்டை ஒப்பிடுகையில், மொபைல் இணைய வேகம் பத்து மடங்கு அதிகரித்துள்ளது. 5ஜி இணைப்பு வசதி நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்றடைந்துள்ளது. தற்போது 5.5 லட்சத்துக்கும் மேற்பட்ட பேஸ் ஸ்டேஷன்கள் மூலம் இந்த நெட்வொர்க் இயங்கி வருகிறது. 5G பயனர்களின் எண்ணிக்கையை 55 கோடியில் இருந்து 2030க்குள் 100 கோடியாக இரட்டிப்பாக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

தொலைத் தொடர்பு துறையில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தில் இந்திய மொபைல் காங்கிரஸின் பங்கு மிக முக்கியமானது. இந்தியாவின் முன்னேற்றத்தையும் அதன் லட்சியங்களையும் பிரதிபலிக்கும் ஒரு தளமாக இது உருவெடுத்துள்ளது." என தெரிவித்தார்.

## தமிழகத்திற்கு காவிரியில் வினாடிக்கு 3,000 கன அடி நீர் திறக்க காவிரி ஒழுங்காற்று குழு பரிந்துரை!

டெல்லி: அக்.9–

தமிழகத்துக்கு காவிரியில் வினாடிக்கு 3,000 கனஅடி நீர் திறக்க காவிரி ஒழுங்காற்று குழுபரிந்துரைத்துள்ளது. தமிழ்நாடு 12,000 கனஅடி நீர் திறந்துவிட கோரிய நிலையில் ஒழுங்காற்று குழு 3,000 கனஅடி திறக்க பரிந்துரை செய்துள்ளது. காவிரி ஒழுங்காற்று குழு தலைவர் வினித் குப்தா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## இன்று வாக்கு எண்ணிக்கை:

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் வாகை சூடுவது யார்?

சென்னை, அக்.9–

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று (அக்.9) நடைபெற உள்ள நிலையில், வாகை சூடுவது யார்? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. .த.வெ.க. அரசை எடைபோடும் தேர்தல்தமிழ்நாட்டில் காலியாக உள்ள 7 சட்டசபை தொகுதிகளில், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் (தனி), திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தாராபுரம் (தனி) ஆகிய தொகுதிகளுக்கு (அக்.6) இடைத்தேர்தல் நடைபெற்றது. தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு பதவி ஏற்ற 4 மாதத்தில், இந்த இடைத்தேர்தல் வந்ததால், புதிய அரசை எடைபோடும் தேர்தலாக இது பார்க்கப்படு கிறது.. இடைத்தேர்தல் வெற்றி யாருக்கு முக்கியம்? ஏற்கனவே, ஆட்சி அமைக்க பெரும் பான்மைக்கு தேவையான 118 தொகுதிகள் த.வெ.க.வுக்கு கிடைக்காததால் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது.

காங்கிரஸ், இரு கம்யூனிஸ்டு கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்தாலும், இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் தொடர்ந்து குடைச்சல் கொடுத்து வருகின் றன. இதனால், மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் வெற்றி என்பது த.வெ.க. அரசுக்கு முக்கிய தேவையாக கருதப்படுகிறது. அதே நேரத்தில், தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய எதிர்க்கட்சிகள் இடைத்தேர்தலில் வெற்றி பெற்றால், அது த.வெ.க. அரசுக்கு பின்னடைவாக பார்க்கப்படுவதுடன், அது ஆட்சியை கலைக்கும் நிலைக்கே கொண்டு செல்லும் அபாயமும் உள்ளது. .தலைவர்கள் தீவிர பிரசாரம்இந்த இக்கட்டான நிலையில் தான் முதல்அமைச்சர் ஜோசப் விஜய், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மதுராந்தகம், தாராபுரம் தொகுதியில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்கே வெற்றி வாய்ப்பு இருப்பதுபோல் தெரிந்தாலும் தேர்தல் நெருங்க.. நெருங்க.. சற்று மங்கத் தொடங்கியது. யாருக்கு வெற்றி கிட்டும்? என்பது மதில் மேல் பூனையாக அமர்ந்திருக்கும் நிலையில் 6ந்தேதி காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. .

5 முனைப்போட்டி நிலவிய நிலையில், மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேல் (த.வெ.க.), பரந்தாமன் (தி.மு.க.), கணிதா சம்பத் (அ.தி.மு.க.), சுகந்தி (மா.கம்யூ.), ஜானகிராமன் (நாம் தமிழர்) ஆகியோர் களத்தில் இருந்தனர்.இதேபோல், தாராபுரம் தொகுதியில் சத்யபாமா (த.வெ.க.), சுகன்யா (தி.மு.க.), பானுமதி (அ.தி.மு.க.), லட்சுமணன் (இ.கம்யூ.), கார்த்திகா (நாம் தமிழர்) ஆகியோர் போட்டியிட்டனர். வாக்காளர்கள் எவ்வளவு? மதுராந்தகம் தொகுதியில் மொத்தம் 2,13,788 வாக்காளர்கள் ஓட்டுபோட தகுதி பெற்றிருந்தனர். இவர்களில் 1,04,926 ஆண் வாக்காளர்களும், 1,08,797 பெண் வாக்காளர்களும், 65 மூன்றாம் பாலின வாக்காளர்களும் அடங்குவார்கள். இதேபோல், தாராபுரம் தொகுதியில் மொத்தம் 2,23,306 வாக்காளர்கள் ஓட்டுபோட தகுதி பெற்றிருந்தனர். இவர்களில் 1,07,285 ஆண் வாக்காளர்களும், 1,16,013 பெண் வாக்காளர்களும், 8 மூன்றாம் பாலின வாக்காளர்களும் அடங்குவார்கள்.

.வாக்கு சதவீதம் குறைந்தது கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற சட்டசபை பொதுத் தேர்தலின்போது மதுராந்தகம் தொகுதியில் 93.22 சதவீத வாக்குகளும், தாராபுரம் தொகுதியில் 89.89 வாக்குகளும் பதிவாகி இருந்தன. ஆனால், இடைத்தேர்தலில் மதுராந்தகம் தொகுதியில் 85.99 சதவீத வாக்குகளும், தாராபுரம் தொகுதியில் 80.31 சதவீத வாக்குகளும் பதிவாகி இருந்தன. அதாவது, மதுராந்தகம் தொகுதியில் 7.23 சதவீதம் அளவுக்கும், தாராபுரம் தொகுதியில் 9.58 சதவீதம் அளவுக்கும் வாக்குப்பதிவு குறைந்து போய் இருந்தது. அரசியல் கட்சி தலைவர்கள் கலக்கம்இடைத்தேர்தலில் வாக்கு சதவீதம் குறைந்துபோனது, அரசியல் கட்சி தலைவர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த முறை இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோர் வாக்களிக்க ஆர்வம் காட்டவில்லை என்று கூறப்படுகிறது. பெரும்பாலான மாணவர்கள் சென்னையில் படித்து கொண்டிருப்பதால், ஓட்டுபோட ஊருக்கு செல்லவில்லை என்று கூறப்படுகிறது. சட்டசபை பொதுத் தேர்தலின் போது இளைஞர்கள் ஆர்வமாக வந்து வாக்களித்ததால், த.வெ.க. வெற்றி பெற்றது. ஆனால், இடைத்தேர்தலில் அது குறைந்து போய் இருப்பதால், முதல் அமைச்சர் விஜய் உள்பட த.வெ.க.வினர் அச்சத்தில் உள்ளனர். .த.வெ.க. அ.தி.மு.க. இடையேதான் கடும் போட்டி?எது எப்படி என்றாலும், இன்று (அக்.9) காலை 8 மணி முதல் வாக்குகள் எண்ணப்பட இருக்கின்றன. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படுகின்றன. அப்போது இருந்தே முன்னணி நிலவரங்கள் தெரியவரும். மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் த.வெ.க. அ.தி.மு.க. இடையேதான் கடும் போட்டி இருக்கும் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே, இந்த இரு தொகுதிகளிலும் அ.தி.மு.க.வே வெற்றி பெற்றிருந்தது. அப்போது, அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற அதே வேட்பாளர்கள், தற்போது த.வெ.க. சார்பில் களம் இறங்கி இருப்பதால், வெற்றி என்பது மதில் மேல் பூனையாகவே இருந்து கொண்டிருக்கிறது. யாருக்கு வெற்றி கிடைத்தாலும் வாக்கு வித்தியாசம் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது."

## ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட்டில் கட்டப்பட்டு வரும் பொது சுத்திகரிப்பு நிலையம்.. அமைச்சர்கள் டாக்டர் வி. கே ராஜுவ்,கே. ஏ செங்கோட்டையன், விஜய் பாலாஜி ஆய்வு.. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தும் அதிகாரிகளுடன் ஆலோசனை..







ஈரோடு. அக். 09

ஈரோடு மாவட்டம் பெருந்துறை இயங்கூர் பகுதியில் செயல்பட்டு வரும் சிப்காட் பகுதியில் கட்டப்பட்டு வரும் பொது சுத்திகரிப்பு நிலையத்தை அமைச்சர்கள் டாக்டர் வி. கே ராஜுவ்,கேஏசெங்கோட்டையன், விஜய் பாலாஜி மற்றும் ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி, மற்றும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே சிப்காட் தொழில் பேட்டை செயல்பட்டு வருகிறது. இங்கு பல்வேறு தொழில் நிறுவனங்கள் தங்களின் தொழிற்சாலைகளை அமைத்து தொழில் செய்து வருகின்றனர்.

இந்த பெருந்துறை சிப்காட் பகுதியில் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளில் இருந்து ரசாயனம் கலந்த கழிவுநீர் வெளியேற்றப்பட்டு அருகில் உள்ள கிராமங்கள் பாதிக்கப்பட்டு வருவதாக தொடர் குற்றச்சாட்டு இருந்து வந்தது.

பெருந்துறை சிப்காட் அமைந்துள்ள சுற்றுவட்டார பகுதிகளில் நிலத்தடி நீர் கடுமையாக பாதிக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் கால்நடைகள், விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு தங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி விட்டதாக அப்பகுதியை சேர்ந்த விவசாயிகளும், பொதுமக்களும் பல்வேறு போராட்டங்களை நடத்தியும், அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு பல புகார் மனுக்களை கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருந்து வந்தது.

இந்த நிலையில் அப்பகுதி பொதுமக்களின் தொடர் போராட்டத்தை தொடர்ந்து பெருந்துறை சிப்காட் வளாக பகுதியில் ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு முடிவு செய்து அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக அப்பகுதியில் பொது சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகளும் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் சிப்காட் பொது சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணியினை தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டாக்டர் வி கே ராஜுவ், வருவாய்த்துறை அமைச்சர் கே. ஏ செங்கோட்டையன், கைத்தறித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி, ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி, ஈரோடு மேற்கு தொகுதி எம்எல்ஏ ஆனந்த மோகன், மொடக்குறிச்சி முன்னாள் எம்எல்ஏ ஜெயக்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று மதியம் பொது சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகளை நேரில் ஆய்வு செய்தனர்.

அதன் பின்னர் பெருந்துறை மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் துறை சார்ந்த அதிகாரிகளுடன் அமைச்சர்கள், ஆட்சியர் ஆகியோர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

## தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு கூடுதல் பாதுகாப்பு




புதுடெல்லி: அக்.9–

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கான 'இசட் பிளஸ்' பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் கூடுதல் படைப் பிரிவினர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் மூலம் 13 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார்தான் இதற்கு பொறுப்பு என்றும் கூறி வரும் எதிர்க்கட்சிகள், அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இதனால், ஞானேஷ் குமாரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே அவருக்கு 'ஸீ+' பாதுகாப்பு உள்ள நிலையில், தற்போது கூடுதல் மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர்.

டெல்லி மோதி பாக் காலனியில் உள்ள ஞானேஷ் குமாரின் இல்லம், தேர்தல் ஆணைய அலுவலகம் ஆகியவற்றில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அவரது தனிப்பட்ட பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிரான தற்போதைய போராட்டங்கள் காரணமாக பாதுகாப்பு அதிகரிக்கப்படவில்லை என்றும், மாறாக அவரது பாதுகாப்புக்கான சூழல் மற்றும் அச்சுறுத்தல் குறித்த மதிப்பீட்டின் அடிப்படையிலேயே அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மூக்காகவுண்டனூரில் தமிழக விவசாயிகள் சங்கம் கிளை சங்கம் தொடக்க விழா மற்றும் பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.



கிருஷ்ணகிரி. அக்.9–

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் அருகே உள்ள மூக்காகவுண்டனூர் நான்கு ரோடு பைபாஸ் பகுதியில், தமிழக விவசாயிகள் சங்கத்தின் மூக்காகவுண்டனூர் கிளை சங்கம் தொடக்க விழாவும், அதனைத் தொடர்ந்து பொதுக்கூட்டமும் மிகச் சிறப்பாகவும் எழுச்சியுடன் நடைபெற்றது.

இந்த விழாவிற்கு மூக்காகவுண்டனூர் கிளை தலைவர் கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். கிளை கௌரவத்தலைவர் முனுசாமிகவுண்டர், கிளை துணைத் தலைவர் சக்திவேல், கிளை செயலாளர் பூவேந்தன், கிளை துணைச் செயலாளர் சிற்றாசு மற்றும் கிளை பொருளாளர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் பேராசிரியர் சின்னசாமி M.A., அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு சங்கக் கொடியேற்றி சிறப்புரையாற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில், மாநில இணைத் தலைவர் செந்தில்குமார் மாநில செயலாளர் சின்னசாமி டிராக்டர் விவசாயிகள் சங்கம் மாவட்ட தலைவர் மகாராஜன் மாவட்டச் செயலாளர்கள் பெரியண்ணன், சென்னைய நாயுடு, மாவட்டத் துணைத் தலைவர் செந்தில், மாவட்ட பொருளாளர் சண்முகம், தர்மபுரி மாவட்ட செயலாளர் சக்திவேல், மாவட்ட துணைச் செயலாளர் மாதன், மத்தூர் ஒன்றிய தலைவர் உதயகுமார், மத்தூர் துணைத்தலைவர் குமரன், மத்தூர் ஒன்றிய செயலாளர் துரை, மத்தூர் ஒன்றிய துணைத் தலைவர்கள் சுரேஷ், வீரன், மற்றும் மத்தூர் ஒன்றிய பொருளாளர் மாதையன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை சேர்ந்த முக்கிய பிரமுகர்களும், கிளைச் சங்கத்தின் புதிய உறுப்பினர்களும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய கோரிக்கைகள்

விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் பின்வரும் கோரிக்கைகள் பொதுக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன, தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து குள்ளம்பட்டி, சந்தம்பட்டி, சைதாப்பேட்டை, ஆல்ரஅள்ளி ஆகிய ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கு நீர் வரும் கால்வாயை தூர்வாரி ஏரிகளுக்கு நீர் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மூக்காகவுண்டனூர் பகுதியில் குடிநீர் மற்றும் வடிகால் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மாவட்ட நிர்வாகம் உடனடியாக செய்து தர வேண்டும்.

கர்நாடக அரசு, தமிழக அரசுக்கு எதிராகக் கட்டிவரும் மேகதாது அணைத் திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

கடன் தள்ளுபடி: கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனை தேர்தல் வாக்குறுதியின்படி முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை உடனடியாக பெற நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். 60 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு மாதம் ரூ.3,000 ஓய்வூதியம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மா, தென்னை, கடலை மற்றும் மானாவாரி பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விழாவின் இறுதியில், ஓய்வுபெற்ற ஆசிரியர் மாயக்கண்ணன் அனைவரையும் நன்றியுடன் நிறைவு செய்தார். மேலும் மூக்காகவுண்டனூர் கிளை சங்கத்தின் இந்த தொடக்க விழா இப்பகுதி விவசாயிகளிடையே பெரும் வரவேற்பையும், எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# குடிமேஅள்ளி கிராமத்தில் அதிமுக நிர்வாகி இறந்ததை அறிந்த அதிமுக கழகத் துணைப் பொதுச் செயலாளர் கேபி.முனுசாமி ஆறுதல் கூறினார்



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப் பட்டினம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட குடிமேனஅள்ளி கிராமத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இருந்த முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் பொன்னுசாமி அவர்களின் இல்லத்திற்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கேபி முனுசாமி அவர்கள் வருகை தந்து திரு. பொன்னுசாமி அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார் உடன் மாவட்ட கழகச் செயலாளர் அசோக்குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஈ.சி.கோவிந்தராஜன், காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அண்ணன் டி.இரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் பொன்னுசாமி இறந்ததை அடுத்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார் கேபி. முனுசாமி அவர்கள் குடும்ப உறுப்பினர்களிடம் தமது இரங்கலை தெரிவித்து, இந்த துயரமான நேரத்தில் மன உறுதியுடன் இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் அதிமுக நிர்வாகிகள், உள்ளூர் கட்சி பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு, மறைந்த பொன்னுசாமி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

குடிமேஅள்ளி கிராமத்தில் நீண்ட காலமாக கழக வளர்ச்சிக்காக பாடுபட்ட பொன்சாமி அவர்களின் மறைவு, கட்சியினரிடையேயும் பொதுமக்களிடையே யும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. நூற்றுக்கு மேற்பட்டோர் அதிமுக தொண்டர்கள் கலந்து கொண்டனர்

# திருவள்ளூர் மாவட்டத்தில் மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் மாபெரும் கல்விக் கடன் முகாம்

## மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல்

திருவள்ளூர் அக் 09 :

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மாணவ மாணவியர் உயர்கல்வி பயில வழிவகை செய்திடவும். கல்விக்கடன் பெரும் வாய்ப்புகளை எளிதாக்கும் வகையிலும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பாக பொதுத்துறை, தனியார்துறை, கூட்டுறவு மற்றும் கிராமப்புற வங்கிகள் இணைந்து மாபெரும் கல்விக் கடன் முகாம் நடத்தப்பட வுள்ளது.



இம்முகாமில் கல்விக் கடன் தேவைப்படும் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மற்றும் வெளி மாவட்டங்களில் குடியிருந்து திருவள்ளூர் மாவட்டத்தில் பயின்று வரும் மாணவ மாணவியர் பங்கேற்று பயனடையும் வகையில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், வங்கிகளில் ஏற்கனவே கல்விக்கடன் வேண்டி விண்ணப்பித்தவர்கள் மட்டுமல்லாமல் புதிதாக கல்விக்கடன் தேவைப்படுபவர்கள் இம்முகாமில் நேரடியாக கலந்துகொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கல்விக்கடன் பெற விரும்பும் மாணவ,மாணவிகள் அனைவரும் https://pmvidyala xmi.co.in/ என்ற இணையதளத்தில் தங்களுடைய விண்ணப்பத்தை தேவையான ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்ய வேண்டும். மாணவ மாணவியர் மற்றும் பெற்றோரின் இரண்டு புகைப்படம், வங்கி கணக்கு புத்தகம், இருப்பிட சான்று, வருமானச் சான்று, ஜாதி சான்று, பான் கார்டு, ஆதார்அட்டை ஆகியவற்றின் நகல்கள். கல்லூரியிலிருந்து பெறப்பட்ட Bonafide சான்றிதழ் மற்றும் கல்விக் கட்டண விவரம், பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு மற்றும் இளநிலை பட்டப்படிப்பின் மதிப்பெண் சான்றிதழ்கள் முதல் பட்டதாரியாக இருப்பின் அதற்கான சான்று மற்றும் கலந்தாய்வு உள்ளிட்ட பெறப்பட்ட சேர்க்கைக்கான மூலமாக ஆவணங்களுடன் முகாமில் கலந்துகொண்டு பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

# சிறுமிகள், பெண்களுக்கு ஏதிரான பாலியல் குற்றங்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க காயல் அப்பாஸ் வலியுறுத்தல்

காயல் பட்டிணம் : அக் 09

சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு ஏதிரான பாலியல் குற்றங்களை தடுக்க முன்னெச்சிரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என த வெ க அரசை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வலியுறுத்தியுள்ளார் இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.



திருவள்ளூர் மாவட்டம் , திருவொற்றியூரில் வடமாநிலத்தைச் சேர்ந்த குடும்பத்தின் 5 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்தில் பீகாரைச் சேர்ந்தவரை காவல் துறையினர் கைது செய்தனர் மேலும். கைது செய்ய பட்ட நபரை சட்ட ரீதியாக கடுமையான தண்டனைக்கு உள்ளாக்க பட வேண்டும் மேலும். இந்த பாலியல் இக்கொடூரச் சம்பவத்தை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மிகவும் வன்மையான கண்டிக்கிறது.

வட மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு பணி புரிய குரைவான சம்பளத்திற்கு தனியார் நிறுவனம் அழைத்து வரும் வட மாநில தொழிலாளர்கள் மீது அம் மாநிலங்களில் வழக்கு பதிவு செய்ய பட்டிருக்கிறதா மற்றும் காவல் துறையினரால் தேட படும் குற்றவாளிகளாக இருக்கலாம்? கூலி தொழிலாளி என்கிற பெயரில் பதுங்கி இருக்கிறார்களா ? எதேனும் குற்றங்களை நிகழ்த்தி விட்டு தப்பி செல்ல கூடிய வாய்ப்பு இருக்கு ? ஆகவே வட மாநில தொழிலாளர்களை காவல் துறையினர் முறையாக ஆவணங்களை ஆய்வு செய்வதுடன் பல கோனத்திலும் விசாரணை செய்ய வேண்டும்.

மேலும் தமிழகத்தில் பல்வேறு பகுதியில் பாலியல், கொலை கொள்ளை போன்ற குற்ற செயலில் வட மாநில தொழிலாளர் கள் ஈடுபட்டு வருவதனால் ஒவ்வொருவரின் அடையாளம், பணியிடம், அவரை அழைத்து வந்தவர், தங்குமிடம், முகவரி உள்ளிட்ட அடிப்படை விவரங்கள் அரசின் அதிகாரப்பூர்வ பதிவில் இருக்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி வலியுறுத்துகிறது .

எனவே : தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. ஆகவே,இனிவரும் காலங்களில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்ற சம்பவங்கள் தமிழகத்தில் எங்கும் நடை பெறாமல் இருக்க தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை உடனடியாக எடுப்பதுடன் சிறுமிகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை த வெ க அரசு உறுதி செய்ய வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

# போச்சம்பள்ளி அருகே அகரம் தென்பெண்ணையாற்றங்கரையில் எரியும் குப்பைகள் - மூச்சுத்திணறும் வாகன ஓட்டிகள்.



கிருஷ்ணகிரி. அக்.9–

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள அகரம் பகுதியில், தென்பெண்ணையாற்றங் கரை ஓரத்தில் மர்ம நபர்கள் தொடர்ச்சியாகக் கிராமங்களில் சேமிக்கும் குப்பைகளையும் தென்னைக் கழிவுகளையும் கொட்டி தீ வைத்துச் செல்லும் அவலம் அதிகரித்து வருகிறது. இதனால் ஏற்படும் அடர்ந்த கரும்புகையால் அப்பகுதியில் செல்லும் வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். ஆற்றங்கரை ஓரத்தில் கொட்டப்படும் குப்பை கழிவுகளுக்கு மர்ம நபர்கள் தீ வைப்பதால், குப்பைகள் கொழுந்துவிட்டு எரிகின்றன. இதில் இருந்து வெளியேறும் அதிகப்படியான கரும்புகை, சாலை முழுவதும் பரவி அடர்ந்த புகைக் மண்டலமாக மாறி காட்சி அளிக்கிறது. எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவிற்குப் புகை மறைப்பதால், அப்பகுதியில் செல்லும் வாகன ஓட்டிகள் இயக்கி வருகின்றனர். மேலும் தென்பெண்ணையாற்றின் கரையோரத்திலேயே குப்பை கழிவுகள் கொட்டப்பட்டுத் தீவைக்கப்படுவதால், சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதோடு நிலத்தடி நீர் மற்றும் ஆற்றின் தூய்மையும் கேள்விக்குறியாகி உள்ளது. தினமும் இந்தச் சாலையைப் பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான மக்களுக்குப் கரும்புகையால் இருசக்கர வாகனங்களில் செல்வோர் மூக்கைபிடித்தவாறு செல்கின்றனர். மர்ம நபர்கள் தொடர்ந்து கழிவுகளைக் கொட்டி தீ வைப்பதைக் தடுக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாகத் தலையிட வேண்டும்.

ஆற்றங்கரை ஓரத்தில் கழிவுகளைக் கொட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மீண்டும் இந்தப் பகுதியில் குப்பைகள் கொட்டப்படாமல் இருக்க நிரந்தரக் கண்காணிப்பு செய்ய வேண்டும்“ என்றும் அப்பகுதி மக்களும் வாகன ஓட்டிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆந்திராவிலிருந்து உரிய அனுமதி இன்றி மணல் கடத்தி வந்த லாரி மற்றும் 10 டன் மணல் பறிமுதல் : டிரைவர் கைது

திருவள்ளூர் அக் 09 :

ஆந்திராவிலிருந்து உரிய அனுமதியின்றி மணல் கடத்தப்பட்டு வருவதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் இருந்தன. இதையடுத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாய்பிரனீத் உத்தரவின் பேரில் பென்னாலூர்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தேவந்தவாக்கம் ஆறு வழிச் சாலையில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ஆந்திராவில் இருந்து வந்த டிஎன் 12 ஏவி 6789 என்ற டாரஸ் லாரியில் 10 யூனிட் ஆற்று மணல் அரசு அனுமதி ஏதும் பெறாமல் கொண்டு வந்தது தெரியவந்தது.இதையடுத்து மேற்கொண்ட விசாரணையில் லாரியில் மணலை கடத்தி வந்தது சென்னையை அடுத்த செங்குன்றம் பகுதியை சேர்ந்த கண்ணன் என்பது தெரிய வந்தது.

இதையடுத்து உரிய அனுமதி இன்றி ஆந்திராவில் இருந்து கடத்தி வரப்பட்ட லாரியை மணலுடன் போலீசார் பறிமுதல் செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். தொடர்ந்து மணல் கடத்தலில் ஈடுபட்ட கண்ணன் என்பவர் மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



விழுப்புரம் மாவட்டம் வட்டம் பொய்யப்பாக்கம் ஏரியில் புனரமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் ரஹ்மான் துவக்கி வைத்தார். உடன் நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருணகிரி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் சரவணன், துணை ஆட்சியர் (பயிற்சி), ஹரிஷ், உதவி செயற்பொறியாளர் சிவகுமார், வருவாய் வட்டாட்சியர் யுவராஜ் உட்பட பலர் உள்ளனர்.

# கோடிகளில் புரளும் குமாரபாளையம் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்..?..

# பள்ளிபாளையம் சாயப்பட்டறை உரிமையாளர் மனோகரன் குற்றச்சாட்டால் பரபரப்பு..

## நீரும் முக்கியம், தொழிலும் முக்கியம் என்ற அடிப்படையில் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்..









பள்ளிபாளையம். அக். 09

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் கோடிக்கணக்கில் லஞ்சப்பணம் புரள்வதாக பள்ளிபாளையம் சாயப்பட்டறை உரிமையாளர் பி. ஆர் மனோகரன் குற்றம் சாட்டி உள்ளார். தனது சாயப்பட்டறைக்கு மின் இணைப்பு வழங்க கோரி அலுவலகத்தில் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. போலீஸ் வரவழைக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் மற்றும் குமாரபாளையம் பகுதிகளில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சாய மற்றும் சலவை பட்டறைகள் இயங்கி வந்தன.

இந்த பட்டறைகளில் இருந்து வெளியேற்றப்படும் சாயக்கழிவு நீரால் நிலம், நீர்நிலைகள், காவேரி ஆறு ஆகியவை ரசாயனம் கலந்த சுத்திகரிக்கப்படாத சாயக்கழிவு நீரால் மாசடைந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

காரணமாக பொதுமக்களும், கால்நடைகளும், மீன்களும் பெருமளவில் பல்வேறு நோய்களுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் திமுக, அதிமுக ஆட்சி காலங்களில் புகாரின் அடிப்படையில் அவ்வப்போது, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுத்து வந்த நிலையில், சிறிதும் பெரிதுமாக செயல்பட்டு வந்த 500க்கும் மேற்பட்ட சாய, சலவை பட்டறைகள் காலப்போக்கில் படிப்படியாக நிறுத்தப்பட்டு, தற்போது அதே 100 என்ற எண்ணிக்கையில் குறைந்து உள்ளது.

இந்த சாய, சலவை பட்டறைகள் மூலம் வெள்ளை நிற நூல் மற்றும் துணிகளுக்கு சாயம் ஏற்றி ஜவுளி உற்பத்தி என்பது நடைபெற்று வந்துள்ளது.

அதே நேரம் பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதிகளில் சுமார் 50,000 விசைத்தறிக்கூடங்கள் இயக்கப்பட்டு அதில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்று வந்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போதைய சூழ்நிலையில், பல்வேறு காரணங்களால் விசைத்தறி ஊடகங்கள் பெருமளவு செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு விசைத்தறிகள் பழைய இரும்புக்கு விற்கும் அவல நிலையில் இன்று விசைத்தறி தொழில் உள்ளது.

அதேபோல் சாய, சலவை பட்டறைகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்று வந்த நிலையில், இன்றைய சாயக்கழிவுநீர் பிரச்சினையால் பெரும்பாலான சாயப்பட்டறைகள் செயல்பட முடியாமலும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் நடவடிக்கையால் மின் இணைப்பு துண்டிப்பு, சீல் வைத்தல் போன்ற நடவடிக்கையால் சாய, சலவை பட்டறைகளின் தொழில் பெருமா அளவு முடங்கி விட்டது.

இந்த நிலையில் புதியதாக தமிழகத்தில் பொறுப்பேற்றுள்ள தவெக அரசு அமைந்த பிறகு பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதிகளில் செயல்பட்டு வரும் சாயப்பட்டறைகளை ஆய்வு செய்து சட்டவிரோதமாகவும், சுத்திகரிப்பு நிலையம் அமைக்காமல் சாயக்கழிவு நீரை வெளியேற்றி வரும் சாயப்பட்டறைகள் மீது கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டாக்டர் வி. கே ராஜீவ் மற்றும் பால்வளத் துறை அமைச்சர் சி. விஜயலட்சுமி ஆகியோர் சாய் பட்டறைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு சாயக்கழிவு நீரை வெளியேற்றி வந்த சாயப்பட்டறைகளுக்கு சீல் வைக்கவும், மின் இணைப்பை துண்டிக்கவும், அபராதம் விதிக்கவும் வாரியத்திற்கு உத்தரவு பிறப்பித்தனர்.

அடிப்படையில் பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதிகளில் செயல்பட்டு வந்த பல சாயப்பட்டறைகள் மூடப்படும், கோடிக்கணக்கில் அபராத தொகையும் விதிக்கப்பட்டதால், சாயப்பட்டறை தொழில் முற்றிலும் முடங்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அமைச்சரின் ஆய்வுக்குப் பின் வாரியத்தின் நடவடிக்கையால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட அனுமதி மறுக்கப்பட்ட பல சாயப்பட்டறைகளில், ஆவத்திபாளையம் அருகே செயல்பட்டு வந்த பி. ஆர். மனோகரன் என்பவருக்கு சொந்தமான பி. ஆர். எம் டையிங் என்ற சாயப்பட்டறையும் ஒன்று.

இந்த நிலையில் முற்றிலும் தொழில் முடக்கப்பட்ட நிலையில் இருந்து வந்த பி ஆர் மனோகரன் தன்னுடைய சாயப்பட்டறையை மீண்டும் இயக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தும் அது பலன் தராத பட்சத்தில், கடும் மன உளைச்சலுக்கும், கோபத்திற்கும் ஆளான அவர் குமாரபாளையத்தில் செயல்பட்டு வரும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரியை சந்திக்க அங்கு சென்ற போது அவருக்கு அனுமதி மறுக்க ப்பட்டுள்ளது.

இதனால் இன்னும் கோபத்தின் உச்சத்திற்கு சென்ற அவர் குமாரபாளையம் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தின் நடு மையத்தில் தரையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டார்.

அப்பொழுது அவர் குமாரபாளையம் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மாதம் தோறும் சுமார் 2 கோடி ரூபாய் வரை அனைத்து பட்டறை உரிமையாளர்களிடம் இருந்து வசூல் செய்து வழங்கியதாக பகிர் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார். இவரின் இந்த குற்றச்சாட்டு அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

இவரின் குற்றச்சாட்டு உண்மை என்றால் லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்தி உண்மை தன்மையை வெளியில் கொண்டுவர வேண்டுமென சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் வைக்கின்றனர்.

நீரின்றி அமையாது உலகு.. என்ற பொது மொழி போல், ஆள் பாதி ஆடை பாதி என்ற பொது மொழியையும் புதிய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீண்ட காலமாக இருந்து வரும் இந்த சாயப்பட்டறை சாயக்கழிவு நீர் பிரச்சனைக்கு உரிய தகுந்த நடவடிக்கை எடுத்து, நீர் நிலைகளையும், சாயப்பட்டறை தொழிலையும் காப்பாற்ற வேண்டியது புதிய அரசின் தலையாய கடமை என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

## தேசத்திற்காக 25 ஆண்டுகள் பொது வாழ்க்கை சேவைப் பணி : பிரதமர் நரேந்திர மோடிக்கு மரியாதை செய்யும் வகையில் பாஜக சார்பில் சேவா யாத்திரை நிகழ்ச்சி :



திருவள்ளூர் அக் 09 :

தேசத்திற்காக 25 ஆண்டுகால பொது வாழ்க்கையை அர்ப்பணித்து தொடர்ந்து மக்கள் சேவையாற்றி வரும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி மற்றும் மரியாதை செலுத்தும் வகையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட பாஜக சார்பில் சேவா ஜோதி யாத்திரை நிகழ்ச்சி திருவள்ளூர் மேற்கு மாவட்ட பா.ஜ.க அலுவலகம் முன்பு நடைபெற்றது

இந்த நிகழ்ச்சிக்கு திருவள்ளூர் மாவட்ட பா.ஜ.க துணைத் தலைவர் ஜெய்கணேஷ் தலைமை தாங்கினார். இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தலைவர் சுந்தரம், இதர பிற்படுத்தப்பட்டோர் அணி மாநில துணைத் தலைவர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பா.ஜ.கவினரின் சேவா ஜோதி யாத்திரையை தொடங்கி வைத்தனர். இந்த யாத்திரையானது பா.ஜ.க அலுவலகத்தில் தொடங்கிய சேவா ஜோதி யாத்திரை முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து பின் மாவட்ட அலுவலகத்தை வந்தடைந்தது.

இந்த நிகழ்வில் மாவட்ட பொதுச் செயலாளர்கள் மணிகண்டன், கருணாகரன் ஆகியோர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் கிழக்கு, மேற்கு மாவட்ட இளைஞரணி தலைவர் வெங்கட், தினேஷ் ஆகியோர் செய்திருந்தனர். இதில், திருவள்ளூர் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர்.

## சீர்மரபினர் நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்தல், புதுப்பித்தல், நலத்திட்ட உதவிகள் பெற சுயவிவரங்களை இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும் : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல்

திருவள்ளூர் அக் 09 :

சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு கீழ்கண்ட நலத்திட்ட உதவிகள் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. விபத்து ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் உதவி தொகை ரூ.1,25,000 வரை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை ரூ.30,000, ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை ரூ.5,000, கல்வி உதவித்தொகை ரூ.1000 முதல் ரூ.8000 வரை, திருமண உதவித்தொகை ரூ.3000 (அ) ரூ.5000 , மகப்பேறு உதவித்தொகை ரூ.6000, மூக்குக் கண்ணாடி செலவுத்தொகை ஈடு செய்தல் ரூ.750, முதியோர் ஓய்வூதியம் ரூ.1200 வீதம் (பிரதிமாதம்)

மேற்படி நலத்திட்ட உதவிகள் பெற சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்கள், 18 வயது முதல் 60 வயது நிறைவு பெறாதவர்கள், அமைப்பு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் குடும்பத்தில் ஒருவர் (அமைப்பு சாரா தொழில், நிலமற்ற விவசாய கூலி, உடலுழைப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள) இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெற தகுதி பெறுகின்றனர்.

மேற்படி, நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்தல், புதுப்பித்தல், நலத்திட்ட உதவிகள் பெறுதலை எளிதாக்கும் வகையில் இணையதளம் www.dncwb.tn.gov.in உருவாக்கப்பட்டுள்ளது.

சீர்மரபினர் நல வாரியத்தில் ஏற்கனவே உறுப்பினராக பதிவு பெற்றவர்களின் விவரம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட வேண்டியுள்ளதால் தங்களின் சுயவிவரங்களான தங்களின் உறுப்பினர் அடையாள அட்டை நகல், ஆதார் நகல், மொபைல் எண் போன்ற விவரங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

## சேலம் சாயப்பட்டறையில் இருந்து திடீரென ரசாயன கசிவு 50 பேருக்கு மூச்சுத்திணறல்.



சேலம். அக். 9–

சேலத்தில் சாயப் பட்டறையில் இருந்து திடீரென ரசாயன கசிவு ஏற்பட்டதால் 50 பேர் பாதிக்கப்பட்டு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

சேலம் மாநகராட்சி 47 வது வார்டு குகை தெற்கு முனியப்பன் கோவில் தெருவில் பத்ரிநாதன் என்பவருக்கு சொந்தமான சாயப்பட்டறை உள்ளது. இங்கு ஜவுளிகளுக்கு தேவையான துணி நூல்களுக்கு சாயமிடும் பணிகள் நடந்து வருகிறது. இந்த பட்டறையில் 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். நேற்று இரவு வழக்கம் போல் தொழிலாளர்கள் நூல்களுக்கு சாயமிடுவதற்காக ஹைட்ரோ குளோரிக் என்ற ரசாயனம் கலந்து வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

அப்போது, சாயப்பட்டறையில் இருந்து ரசாயனம் (ஆசிட்) திடீரென கசிய தொடங்கியது. இதனால் தொழிலாளர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு வெளியே ஓடிவந்தனர். சாயப்பட்டறை அருகில் உள்ள குடியிருப்புகளுக்குள் ரசாயனம் கசிந்ததால் வீடுகளில் இருந்த பொதுமக்கள் சுமார் 50 க்கும் மேற்பட்டவர்களுக்கு கண் எரிச்சல் மற்றும் மூச்சுதிணறல் ஏற்பட்டது. இது தொடர்பாக அப்பகுதி பொதுமக்கள் செவ்வாய்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து சாயப்பட்டறைக்குள் சென்று தண்ணீரை பீய்ச்சி அடித்து ரசாயன கசிவை கட்டுப்படுத்தினர்.

மேலும், செவ்வாய் பேட்டை போலீசாரும் அங்கு வந்து விசாரணை நடத்தினர். இதனிடையே, அந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், அடிக்கடி இதுபோன்று சாயப் பட்டறையில் இருந்து ரசாயன கசிவு ஏற்படுவதாகவும், இதனால் கண் எரிச்சல், மூச்சு திணறல் ஏற்படுவதகாவும் புகார் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து சாயப்பட்டறை மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியுடன் செயல்படுகிறதா? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. நூல்களுக்கு சாய மிடுதலுக்கு பயன்படுத்தப்படும் ஹைட்ரோ குளோரிக்கசிவு எப்படி ஏற்பட்டது? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## குழந்தைகளுக்கு பாலில் விஷம் கலந்து கொலை செய்த வழக்கில் அபிராமிக்கு ஜாமீன் மறுப்பு

காஞ்சிபுரம்: அக்.9–

குன்றத்தூரில் குழந்தைகளுக்கு விஷம் கொடுத்து கொலை செய்த வழக்கில் தாய் அபிராமிக்கு ஜாமீன் வழங்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது. காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரைச் சேர்ந்த விஜய் – அபிராமி தம்பதிக்குத் திருமணமாகி, நான்கு மற்றும் ஆறு வயதில் 2 குழந்தைகள் இருந்தனர். டிக்டாக்கில் பிரபலமான அபிராமிக்கு அந்த பகுதியைச் சேர்ந்த பிரியாணிக் கடையில் பணியாற்றும் மீனாட்சி சுந்தரம் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது.

திருமணம் தாண்டிய இந்த உறவுக்குத் தடையாக இருந்த தனது 2 குழந்தைகளுக்கும் கடந்த 2018ம் ஆண்டு பாலில் விஷம் வைத்து, அபிராமி கொலை செய்தார். பின்னர், மீனாட்சி சுந்தரத்துடன், கேரளா தப்பிச் செல்ல முயன்றபோது, இரண்டு பேரையும் போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த காஞ்சிபுரம் மகிளா நீதிமன்றம், அபிராமி மற்றும் மீனாட்சி சுந்தரம் ஆகிய இருவருக்கும் சாகும் வரை சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. சிறப்பு நீதிமன்ற உத்தரவை ரத்து செய்யக்கோரியும், தண்டனையை நிறுத்தி வைத்து ஜாமீன் வழங்கக் கோரியும் அபிராமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் என்.சதீஷ்குமார் மற்றும் கே.ராஜசேகர் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அபிராமி தரப்பில், குற்ற சம்பவத்தில் மனுதாரரை தொடர்புபடுத்த எந்த நேரடி ஆதாரமும் இல்லை என்பதால், தண்டனையை நிறுத்தி வைத்து ஜாமீன் வழங்க வேண்டும் என வாதிடப்பட்டது.

இந்த வாதத்தைக் கேட்ட நீதிபதிகள், வழக்கில் முதல் சாட்சியான அபிராமியின் கணவர் அளித்த சாட்சியத்தில், குழந்தைகளுக்கு கொடுத்த பால் கசப்பாக இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். வழக்கு ஆதாரங்களை பார்க்கும் போது, தற்போதைய நிலையில், தண்டனையை நிறுத்தி வைக்க தகுதியான வழக்கு இது அல்ல எனக் கூறி, அபிராமியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. மேலும், பிரதான மேல் முறையீட்டு வழக்கை நவம்பர் 4ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

## பி.டி.உஷாவின் சாதனையை முறியடித்த வித்யா ராம்ராஜை நேரில் அழைத்து பாராட்டிய ரஜினி!

சென்னை: ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்களை குவித்த வித்யா ராம்ராஜை நேரில் அழைத்து பாராட்டிய ரஜினி. 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் பி.டி.உஷாவின் சாதனையை முறியடித்த வித்யா ராம்ராஜை ரஜினி நேரில் அழைத்து பாராட்டினார்.

# சேலம் ஜி.ஹெச்'ல் முழு உடல் பரிசோதனை மையத்தில் 3டி முப்பரிமாணத்தில் மார்பக புற்றுநோயை கண்டறியும் வசதி.




சேலம். அக்.9–

சேலம் அரசு மருத்துவமனையில் உள்ள முழு உடல் பரிசோதனை மையத்தில் 3டி முப்பரிமாணத்தில் மார்பக புற்றுநோயை கண்டறியும் வசதி உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையானது பல்வேறு துறைகளுடன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இதனால் சேலம் மட்டுமின்றி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் அதிகளவில் நோயாளிகள் வருகின்றனர். அவர்களை மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு, மேம்படுத்தப்பட்ட முழு உடல் பரிசோதனை செய்யும் மையம் பயன் பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

இதன்மூலம் ரத்த பரிசோதனைகள், சிறுநீரகம், கல்லீரல் செயல்பாடு, கொழுப்பு அளவு, இசிஜி, எக்கோ, அல்ட்ராசவுண்ட் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகிறது. சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் இல்லாத பல வசதிகள் இங்கு உள்ளது. மேலும், கட்டணமும் குறைவு என்பதால் பொதுமக்களிடம் பெரிய அளவில் வரவேற்பை பெற்றுள்ளது. இதுகுறித்து அரசு மருத்துவர்கள் கூறியதாவது: கோல்ட், டைமண்ட், பிளாட்டினம், பிளாட்டினம்பிளஸ் என்ற 4 வகையான முழு உடல் பரிசோதனை செய்யும் திட்டங்கள் உள்ளது. கோல்ட் திட்டத்தில் பரிசோதனை மேற்கொள்ள ரூ.1000, டைமண்ட் திட்டத்திற்கு ரூ.2000, பிளாட்டினம் திட்டத்திற்கு ரூ.3000, பிளாட்டினம் பிளஸ் திட்டத்திற்கு ரூ.4000 கட்டணம் செலுத்த வேண்டும்.

கோல்ட் திட்டத்தில் முழுமையான ரத்தபரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, கொழுப்பின் அளவு, கல்லீரல் செயல்பாடு, டிஜிட்டல் எக்ஸ்ரே உள்ளிட்ட பரிசோதனை மேற்கொள்ளப்படும். டைமண்ட் திட்டம் என்பது கோல்ட் திட்ட பேக்கேஜ் பரிசோதனைகளுடன் சேர்த்து, எக்கோ, தைராய்டு உள்ளிட்ட பரிசோதனை செய்யப்படும். பிளாட்டினம் பரிசோதனையில் டைமண்ட் பேக்கேஜ் பரிசோதனைகளுடன் சேர்த்து, டிஜிட்டல் மேமோகிராம், டெக்சா ஸ்கேன், எலும்புகளின் ஆரோக்கியம் குறித்த பரிசோதனை செய்யப்படும். பிளாட்டினம் பிளஸ் திட்டத்தில் பிளாட்டினம் பேக்கேஜ் பரிசோதனைகளுடன் சேர்த்து, முழுமையான கண் பரிசோதனை, டிரட்மில், நுரையீரல் செயல்பாட்டு சோதனை மேற்கொள்ளப்படும்.

முழு உடல் பரிசோதனை செய்ய வரும் நபர்கள் கட்டாயம் முன்பதிவு செய்ய வேண்டும். மேலும், பரிசோதனைக்கு வரும் நபர்கள் காலையில் சாப்பிடாமல் வரவேண்டும். ரத்த பரிசோதனை எடுத்தபிறகு மருத்துவமனை நிர்வாகம் சார்பில் இலவசமாக உயர்தர காலை உணவு வழங்கப்படும். அதன் பிறகு மீண்டும் பரிசோதனை செய்யப்படும். 40 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பெண்களும் மார்பக புற்றுநோய் மேமோகிராம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். 40 வயதிற்கு உட்பட்டவர்கள் அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை செய்துகொள்ளலாம். சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் இல்லாத பல வசதிகள், சேலம் அரசு மருத்துவமனை முழு உடல் பரிசோதனை மையத்தில் உள்ளது.

இங்கு 3டி முப்பரிமாணத்தில் மேமோகிராம் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒரு திசுக்கள் கூட விடாமல் லேயர் லேயராக பார்க்க முடியும். கால்சியம் நுண் படிமங்கள், அதாவது புற்றுநோய்க்கு முந்தைய காரணிகளை கண்டறிய முடியும். ஒரு சென்டி மீட்டருக்கு குறைவாக உள்ள மார்பக புற்றுநோய் கட்டிகளைக்கூட கண்டுபிடித்து விடலாம். அப்போது முழு மார்பகங்களை அகற்றாமல், கட்டிகளை மட்டும் அகற்றி சிகிச்சை அளிக்க முடியும். அந்த அளவுக்கு சிறப்பு வாய்ந்த அதிநவீன மேமோகிராம் வசதி உள்ளது. அதிநவீன மருத்துவ உபகரணங்கள், திறன்வாய்ந்த மருத்துவர்கள், சிறப்பு வல்லுநர் குழுவுடன் கூடிய சிகிச்சை அளிக்கப் படுகிறது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஈரோடு மாவட்டம் முத்து கவுண்டன் பாளையம் புதுப்பிக்கப்பட்ட பயணியர் நிழற்குடை திறப்பு..

## மொடக்குறிச்சி எம் எல் ஏ டி. சண்முகன் திறந்து வைத்து சிறப்பு..



ஈரோடு. அக். 09

ஈரோடு மாவட்டம் வடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முத்து கவுண்டர் பாளையம் பேருந்து நிறுத்தத்தில் புதுப்பிக்கப்பட்ட பயணியர் நிழல் குடையை தொகுதி எம்எல்ஏ டி. சண்முகன் திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட முத்து கவுண்டன் பாளையம் ரிங் ரோடு அருகே பயணியர் நிழல் குடை இருந்து வந்தது. தற்போது அந்த நிழல் குடை சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. இதனால் பேருந்துக்காக காத்திருக்கும் பொதுமக்கள் வெயில் மற்றும் மழைக்கு பாதுகாப்பாக ஒதுங்குவதற்கு முடியாத சூழ்நிலை இருந்து வந்த நிலையில், அந்த பழுதடைந்த நிழல குடையை புதுப்பிக்கும் நோக்கில் ஈரோடு தெற்கு அரிமா சங்கத்தின் சார்பில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்த இடத்தில் புதுப்பிக்கப் பட்ட பயணிகள் நிழல் குடை நிறுவப்பட்டது.

இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்டு மொடக் குறிச்சி சட்ட மன்ற உறுப்பினர், முன்னாள் மாவட்ட அரிமா ஆளுநர் டி. சண்முகன் புதுப்பிக்கப்பட்ட நிழல் குடையை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிக்கு ஈரோடு தெற்கு அரிமா சங்க தலைவர் புஷ்பமாலா பிரபாகரன் தலைமை வகித்தார்.

முன்னாள் மாவட்ட ஆளுநர் டி ஏ பூபதி, எஸ் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் நிகழ்ச்சியில் மண்டல தலைவர் கே மோகனசுந்தரம், வட்டத் தலைவர் எஸ் விண்குருநாதன், திட்ட இயக்குனர் எஸ். ராஜரத்தினம். உள்ளிட்ட ஈரோடு தெற்கு ஆரியமா சங்க நிர்வாகிகளும், தவெக நிர்வாகிகளும் திரளாக கலந்து கொண்டனர்.

# மத்தூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் 100 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா கோலாகலம்



கிருஷ்ணகிரி. அக்.9–

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் அருகே மத்தூர்பதி அரசு சமுதாய கூடத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு மேற்பார்வையாளர் நிலை1 சைலா வரவேற்புரையாற்றினார். குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் நித்யா, வட்டாரக் கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் குரல்வாணி, ஆர்.பி.எஸ்.கே மருத்துவர் நித்யா மற்றும் சமூக நலத்துறை கல்யாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில், தமிழக வெற்றிக் கழகத்தின் கிருஷ்ணகிரி தென்கிழக்கு மாவட்ட செயலாளரும், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினருமான மருத்துவர் இளையராஜா சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து, மத்தூர் வட்டாரத்திற்குட்பட்ட பல்வேறு அங்கன்வாடி மையங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட சுமார் 100 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தட்டு வரிசையில் வளையல், சீர்வரிசைப் பொருட்கள் மற்றும் அறுசுவை உணவு வழங்கி, அவர்களை ஆசீர்வதித்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மத்தூர் ஒன்றிய செயலாளர்கள் விக்னேஷ், சிவா, சக்தி மற்றும் பொதுமக்களும், கட்சி நிர்வாகிகளும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

மத்தூர் வட்டாரத்தின் பல்வேறு அங்கன்வாடி மையங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் கலந்துகொண்டு பயன்பெற்ற இச்சிறப்பு நிகழ்விற்கான ஏற்பாடுகளை, ஒருங்கிணைப்பாளர் சுமதி மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள், உதவியாளர்கள் மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியில், மேற்பார்வையாளர் நிலை 2 கீதா மற்றும் மகேஸ்வரி ஆகியோர் நன்றியுரை வழங்கினர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# ஸ்மார்ட் மீட்டர் பணி தனியாருக்கு.!!

## மின்வாரிய தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு!

சென்னை: அக்.9–

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TNPDCL) மாநிலத்தில் உள்ள 1.77 கோடி மின் இணைப்புகளில் 'ஸ்மார்ட் மீட்டர்' (Smart Meter) பொருத்துவதற்கான புதிய டெண்டரை (ஒப்பந்தப்புள்ளி) அண்மையில் கோரியுள்ளது. மின்வாரியத்தின் இந்த நடவடிக்கைக்கு பல்வேறு மின்வாரிய தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர் கூட்டமைப்புகள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனடிக்கெட் புக்

மின்சார வாரியத்தில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியை தனியாருக்குத் தாரைவார்க்கும் தவெக அரசின் முடிவுக்கு தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளன. மேலும் மின்சார வாரியத்தை தனியார்மயமாக்க தவெக அரசு முயற்சிப்பதாகவும் தொழிற்சங்கங்கள் குற்றம்சாட்டி உள்ளன. இப்படி அனைத்து பணிகளையும் தனியாரிடம் வழங்கிவிட்டு தவெக அரசு யாருக்காக தான் ஆட்சி நடத்தப் போகிறது என தொழிற்சங்கங்கள் காட்டமாக கேள்வி எழுப்பி உள்ளன. தவெக அரசானது, ஒன்றிய பாஜக அரசின் கொள்கையை அப்படியே பின்பற்றுவதாகவும் தொழிற்சங்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளன. ஸ்மார்ட் மீட்டர்களை வாங்குவது, பொருத்துவது மற்றும் அதைப் பராமரிக்கும் பணிகளைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது மின்சார வாரியத்தை முழுக்க முழுக்க தனியார்மயமாக்குவதற்கான ஒரு தொடக்கப் புள்ளி என்று தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன

தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்திட கோரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை திரும்பப்பெற வேண்டும் எனவும் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தி உள்ளன. ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியைத் தனியாருக்குத் தாரைவார்க்கும் முடிவால், 200 யூனிட் இலவச மின்சாரம் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட கூடும் என்றும் தொழிற்சங்கங்கள் எச்சரித்து உள்ளன

# ஊராட்சி தொடக்கப் பள்ளியில் உலக கை கழுவும் தினம் விழிப்புணர்வு...!




வந்தவாசி, அக் 09:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் மற்றும் நகராட்சி இணைந்து காமராஜ் நகர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் (கிழக்கு) உலக கை கழுவும் தினம், சுத்தம் சுகாதாரம் விழிப்புணர்வு, தூய்மை பணிக்கான பொருட்கள் வழங்கும் நிகழ்வு உள்ளிட்ட முப்பெரும் விழாவாக நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை ஆ.சித்ரா தலைமை தாங்கினார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் முன்னிலை வகித்தார். ஆசிரியை கண்மணி வரவேற்றார். சிறப்பு அழைப் பாளராக, வந்தவாசி நகராட்சி சுகாதார ஆய்வாளர் எஸ்.ராமலிங்கம் பங்கேற்று, சுத்தம் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு தகவல்களை மாணவர்களுக்கு விளக்கினார். மேலும் கல்வியின் அவசியம் குறித்தும் விளக்கினார். மேலும் ரெட் கிராஸ் பேரிடர் மேலாண்மை குழு உறுப்பினர் சீ.கேசவராஜ் பங்கேற்று உலக கை கழுவும் தினத்தையொட்டி கை கழுவும் முறைமைகளை மாணவர்களுக்கு செயல்விளக்கம் அளித்தார். மேலும் பள்ளி மாணவர்கள் தூய்மை பயன்பாடுகளுக்காக பிளாஸ்டிக் டிரம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். இறுதியில் பள்ளி ஆசிரியை சாந்த குமாரி நன்றி கூறினார்.

# திருத்துறைப்பூண்டி அருகே வெறிநாய்கள் அட்டகாசம்: 10க்கும் மேற்பட்டோர் கடிபட்டு காயம்!

திருவாரூர்: அக்.9–

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சமீபகாலமாக தெருநாய்கள் மற்றும் வெறிநாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். குறிப்பாக, திருவாரூர் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக நாய்கள் கடிக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு கூத்தாநல்லூர் பகுதியில், தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த ஒன்றரை வயது குழந்தையை வெறிநாய்கள் கடித்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையடுத்து, மாவட்டம் முழுவதும் நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இதுவரை போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இந்த நிலையில், திருவாரூர் மாவட்டம் முத்துப் பேட்டை பகுதியில் இன்று காலை பால்வாங்கு வதற்காகவும், கடைத்தெரு பகுதிக்குச் செல்வதற் காகவும் சாலையில் சென்றுகொண்டிருந்த பொதுமக்களை திடீரென வெறிநாய்கள் துரத்திக் கடித்தன.

இந்தத் தாக்குதலில் சிறுவன் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்த வர்கள் உடனடியாக முத்துப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு முதலுதவி அளிக்கப்பட்டது. இதில் பலத்த காயமடைந்த 7க்கும் மேற்பட்டோர் மேல் சிகிச்சைக்காக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

ஒரே நாளில் அடுத் தடுத்து பொதுமக்களை வெறிநாய்கள் கடித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, முத்துப்பேட்டை பேரூராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து பொதுமக்கள் போராட்ட மனநிலையில் உள்ளனர். மேலும், பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, சுற்றித்திரியும் வெறிநாய்களை உடனடியாகப் பிடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்றும், நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992